154 (2)

கைமுறை வைத்தியம்.

134

134

திரு. ஜே. எல். அனந்தய்யர்,
~~செவ்வாய் பேட்டை~~, ராசிபுரம்.
சேலம். 2/2
"கை முறை வைத்திய கட்டு-2"

Verification completed Total Pages 15
Sunderananda
17.9.64

Sir,
Palm leaf returned to individual on 28-12-63
31-1-64.

7/2

(137)

தேதி: 31.12.63.
ஓலைச் சுவடியின் பெயர்:-" கை முறை வைத்தியம் கட்டு-2".
உரிமையாளரின் பெயர்: ஜே.எஸ்.அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்ப் பேட்டை~~, சேலம்.
இராசிபுரம்

மேகத்துக்குச் சூரணம்:-

திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், கருஞ்சீரகம், கற்கடக சிங்கி, நல்ல சீரகம், கொத்தமல்லி, சதகுப்பை, பெருங்காயம், வெள்ளி, உள்ளி, வசம்பு, தேர்வாலம், பருப்பு, அப்ளசாரம், சத்தி சாரம், நவச்சாரம், வெங்காரம், பஞ்ச லவணம், நிலவேம்பு, பேய்முசட்டை, சீந்தி வேர், புங்கம் வேர், மருள் கிழங்கு, வெருகங் கிழங்கு, காட்டு முருங்கைப் பட்டை, சிறுநெருஞ்சி வேர், சிவதை வேர்,
கடை சரக்கு இருபது வகையும் ஒரு நிறையாய் நிறுத்துச் சூரணம் பண்ணிச் முன் பண்ணின சூரணம் ரெண்டு பங்கு சிவதைச் சூரணம் ஒரு பங்குங் கூட்டிக் கலந்து தேனிலாவது, நெய்யிலாவது, வெந்நீரிலாவது, வெருகடிப் பிரமாணம் கொள்ள இருக்குந் தீரும் வியாதி உடம்பு கடுப்பு, பெருவயறு, அழலை, நீர்க் கோவை, பாண்டு ரோகம், காமாலை உடம்பு வீக்கம், விடபாகம், காய்ச்சல் மேல் வீக்கம், உள்மாந்தை, அசீரணம், வாந்தி வயறெரிப்பு, வாயில் ரெத்தம் விழுகிற மேக மெள்ளப் பட்டதெல்லாம் தீரும். இதுக்கு சிநேதி பண்டமாகாது. இருபது நாள் கொள்ளவும்.

ஒருக வாய்வுக்கு மருந்து:-

கொடிப் பிரிச்சான் பிடி.௪, ஈர வெங்காயம் நல்ல சீரகம், அத்தப் பிரிச்சானை இடித்து இந்த மருந்தை அரைத்துக் கூடப் போட்டுச் சம்பச் சோத்துத் தண்ணீர் வார்த்து அதைச் சீலையில் வடிகட்டி இரத்து நேரமொன்றுக்கு கால்படி தண்ணீர் குடிக்கவும். இந்தப் பிரகாரம் மூன்று நாள் கொள்ளவும். இதுக்கு புகை, புளி தவிர்க்கவும். ஒருக வாய்வு தீரும். இது கை கண்டது.

கிரந்திக்கு எண்ணெய் மருந்து:-

விளக் கெண்ணெய் படி.½, எருக்கம் பால் படி.¼, ஊமத்தை இலைச் சாறு படி.½, இவ் மூன்றும் ஒன்றாய்ச் சேர்த்து எண்ணெய்ச் சட்டியில் வார்த்து ஒரு விறகா எரித்து சிவந்து வருகிற பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவும். மறுநாள் பழைய சோறு சாப்பிட்டு அந்த எண்ணெய் மேலே தேய்க்கவும். மத்தியானத்துக்கு எருமைச் சாணி கொண்டு வந்து மேலே தேய்த்துக் குளித்து தண்ணீர் வார்க்கவும். இந்தப் பிரகாரம் மூன்று நாள் தேய்த்துத் தண்ணீர் விடவும். எந்த கிரந்தியும் உதிர்ந்து போகும். இது கை கண்டது.

காமாலைக்கு மருந்து:-

கையாந் தகரைத் தழை பலம்.௨, சுக்கு, வெள்ளுள்ளி, மிளகு ஓர் ஒன்றுக்கு விராகனிடை.௪, வெள்ளாட்டுக் கோமியம் படி.5, இந்த மருந்தை நாலும் அரைத்துக் கோமியத்தில் கலந்து கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் வெந்நீருஞ் சோறும் மூன்று நாள் கொள்ளவும். நாலாம் நாள் பத்தியம் முறிக்கவும். இதுக்கு காமாலை எல்லாந் தீரும். இது கை கண்டது.

காட்டு மருந்து:-

நத்தைச் சாறனை வேர் ஞாயிற்றுக் கிழமை பிடுங்கி வந்து கொக்கிச் சரட்டில் கோத்துக் கையில் மஞ்சள் தடவிக் கையில் கட்டவும். காமாலை தீரும.

பிள்ளையில்லா மலட்டு வலிக்கு மருந்து எண்ணெய்:-

வேப்பெண்ணெய் படி.௪, எருக் தாளிப் பூண்டு இருபது கொண்டு வந்து இடித்து எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். முழுக்கு வந்து முழுகின மறு நாள் பிறந்த நாலாம் நாள் இந்த எண்ணெயை பிடித்துக் கால்படி முத்து பல்லு பருந்த மூன்று நாள் கொடுக்கவும். இதுக்கு மலட்டுப் புழு செத்து விழும். பிள்ளை உண்டாம். இதுக்குப் பத்தியம் மூன்று நாள் இருக்கவும். நாலாம் நாள் பத்தியம் முறிக்கவும். இது கை கண்டது.

சயத்துக்கு இருமலுக்குச் சூரணம்:-

முற்ற செவ்விளநீர்க்காய் அதின் கண்ணைத் திறந்து ஒரு காய்க்கு பதினஞ்சு தேத்தான் கொட்டை போட்டு அதின் மண்டையிலே மூடி ரெண்டு நாள் இருக்க விட்டு அந்தத் தேத்தான் கொட்டையை அரைத்து அடையாகப் பண்ணிக் காய வைக்கவும்.

ஆடாதோடை வேர் பலம்.௨, கண்டங்கத்திரி வேர் பலம்.௨, ஆத்து முள்ளி வேர் பலம்.௨, இந்த மருந்தை மூன்று தேத்தாங் கொட்டையும் கூடப் போட்டு இடித்து சூரணம் பண்ணிக் கொண்டு குப்பியில் அடைத்து வைக்கவும். இது கொள்கிற போது ரெண்டு பணவிடை தேனில் குழப்பிக் கொள்ளவும். தினந் தினம் பணவிடை அதிகமாய்க் கொள்ளவும். பத்தியம் பசுவின் பாலுஞ் சோறும். பசுவின் நெய்யும் வாழைக் கச்சலும் தின்னவும். உப்பு, புளி தவிர்க்கவும். இதுக்கு சயமேற்பட்ட தெல்லாந் தீரும். இது கை கண்டது.

நீல கண்ட ரசம்:-

நாவி வெண்ணெய்ப் பாசாணம், கெவுரி பாசாணம், அரிதாரம், மனோசிலை,

வெங்காரம், துத்தம், நாகம் இது வெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்துக் கட்டி இலுப்பைக் கட்டி இதில் பாதி. நேர்வாளம் இதில் பாதி. கருஞ்சீரகம் இதில் பாதி ரசம் இதில் பாதி, கெந்தகம் இதில் பாதி இது வெல்லாங் கூடக் கலந்து மிளகு, தக்காளிச் சாத்திலொரு நாள் மத்திக்க மறுநாள் காவாளைச் சாத்தில் ஒரு நாள் மத்திக்க மறுநாள் பாகலிலைச் சாத்தில் ஒரு நாள் மத்திக்க மறுநாள் தும்பைச் சாத்திலொரு நாள் மத்திக்க மறுநாள் ஊமத்தை இலைச் சாத்திலொரு நாள் மத்திக்க மறுநாள் கையாந்தகரைச் சாத்திலொரு நாள் மத்திக்கச் சுக்குமணி இலைச் சாத்தி லரைத்து மிளகு பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு விச மென்னப் பட்டதுக்கு ஒரு உருண்டை நாவலைப்பாலில் உரைத்துக் கொடுக்கவும். ஒரு சாமத்தில் நிற்கும். விரியன் கடி முதலான விசத்துக்கு ஒரு உருண்டை வெற்றிலைச் சாற்றிலுரைத்துக் கொடுக்க விசந் தீரும். மிக விஞ்சித் தலை மண்டை கொண்டால் ஒரு உருண்டை நாவிலொரு பங்கு உரைத்து கலிக்க விடவும். நசியம் விடவும். பிடரியில் தேய்க்கவும். சவ மெழுந்திருக்கும். கடிவாயிலுந் தடவவும். இந்த மருந்துக்கு பத்தியம் உப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வெள்ளருந் சோறும் குடிக்கவும். இந்த மருந்து கை கண்டது.

__புது_தாமரை_வட்டு_கடிக்கு:-__

கொடிக் கள்ளிச் சருகு சுட்டு விளக்கெண்ணெயில் கலந்து தடவத் தீரும்.

__நீர்க்_கட்டுக்கு_கல்லடைப்புக்கு_மருந்து:-__

துளசி, முருங்கை யிலை கொண்டு வந்து இடித்துப் பசுவின் பாலில் பிசைந்து வடி கொண்டு கொடுக்கவும். நீர்க் கட்டுக் கல்லடைப்பு இது வெல்லாந் தீரும். கை கண்டது.

__மூலத்_தால்_விழுகிற_ரெத்தத்துக்கு_மருந்து:-__ விழுதிச் சாறு பசுவின் தயிரில் கொடுக்கவுந் தீரும்.

__தேளுக்கு_மருந்து:-__

மனிதன் காதில் இருக்கிற குரும்பியை எடுத்து எருக்கம் பால் விட்டு சாரித்து அந்தக் கடி வாயிலே தடவத் தேள்கடி தீரும்.

(வேறு)

பேய்ச் சுமட்டி வேரிலே தமரிட்டு அந்த தமரிலே ஒரு விராகனிடை ரசம் விட்டு வைத்து மூன்று நாள் விட்டு நாலாம் நாள் பார்த்தால் பூமியை விட்டு மேலே எழும்பி இருக்கும். அதை எடுத்து நெருஞ்சிலைப் பாலிலொரைத்துப் போட விசந் தீரும். இது கை கண்டது.

__தேத்தாங்_கற்பம்:-__

இளந் தேத்தாங் காய் கொண்டு வந்து உரலில் இடித்து நிழலிலுலர்த்திச் சூரணம் செய்து புதுச் சலயத்தில் போட்டு வைத்துக் கொள்ளவும். இதை வெருகடிப் பிரமாணம் பசுவின் பாலில் கொள்ள வயத்து நோவு தீரும். தலை வலிக்கு மோரில் கொதிக்க வைத்து நெத்தியிலே பூச பெரும்பாடு பாண்டுரோகம் காமாலை மீளாஇருமல், விக்கல், வெப்பம், வாந்தி, சோகை, பித்த பாண்டு ரோகம் இது வெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது. இந்தச் சூரணத்தை நெய்யில் குழப்பி நசியம் பண்ணத் தலை முழுக நேத்திர வாய்வு தீரும். இந்தச் சூரணம் ஒரு பலம் தேவதாரம், சுக்கு, இந்துப்பு ஒவ்வொன்றுக்கு விராகனிடை, கூட்டிச் சூரணம் தின்னத் தீர்க்க மேக மென்னப் பட்டதெல்லாந் தீரும். வெள்ளை பிரமியம் வெட்டை, சோகை இதுக்கு மோரில் இந்தச் சூரணம் விராகனிடை கலந்து கொடுக்கவும். தீரும். பத்தியமில்லை.

__பிரமியத்துக்கு_மருந்து:-__

அமுக்கிறாங் வேர் வெள்ளாட்டுப் பாலிலரைத்து எட்டு நாள் கொள்ளத் தீரும்.

(வேறு)

செப்பு நெருஞ்சி வேர், பொன்னாங்கண்ணி வேர் இது வெல்லாம் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கப் பிரமியந் தீரும்.

__வலி_குன்மத்துக்கு_மருந்து:-__

சுக்கு, மிளகு, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு ஒவ்வொன்றுக்கு வறுத்த நல்லெண்ணெய் தேங்காய்க் கண் துளைத்து இந்தச் சாமான் எல்லாம் ... கள்ளிப் பால் வார்த்து மூளைக் குச்சியடித்து இதுக்கு அடையாளம் ... லாவது வெல்லத்திலே யாவது சுட்டுத் தின்னவும். இதுக்கு ... வலிகுன்மம், எரிகுன்மம், குலை குன்மம், வாய்வு குன்மம், தீரும். இதுக்குப் பத்தியமில்லை.

__சன்னி_வாத_சுரத்துக்கு:-__

முந்திரிகைப் பழமும், கொம்புத் தே...

__இருமல்_கசாயம்:-__ கல் முத்தக் காசு, சுக்கு, கண்டங்கத்திரி வேர், சீந்தில் ... கொடுக்கவும். சன்னி வாத சுரம் சோயம் தின்னவும்.

அருவைக்கு மருந்து:-

பேய்க் குமட்டி பழச்சாறு, நேர்வாளங் கொட்டை பத்து, திப்பிலி காசிடை.5, மிளகு காசிடை.5, இந்துப்பு பலம்.உ, கல்லுப்பு பலம்.½, வெடியுப்பு பலம்.உ, வெங்காரம் காசிடை.உ, நவச்சாரம் காசிடை.உ இது எல்லாம் கட்டி இடித்து வீசக் கெண்டை உரி வார்த்து இதை எல்லாம் வேக வைத்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு தேத்தாங் கொட்டை பிரமாணம் குளிகை செய்து இதை வாழைப் பழத்தில் வைத்து முழுங்கவும். இப்படி 20 நாள் தின்னவும். இதற்கு பத்தியம் புகை புளி ரெண்டும் ஆகாது. அருவை தீரும்.

பிள்ளையில்லாத பேருக்கு மருந்து:-

பசுவின் பால் படி.¼, கோமியம் படி.¼, அதின் சாணப் பால் பலம்.க, அதின் நெய் பலம்.க, இதற்கு கடைச் சரக்கு கொடிவேலி வேர், சுக்கு, மிளகு, கடுக்காய், மாசிக்காய், நெல்லிப் பருப்பு முள்ளி வேர், கடுகுரோகிணி, அந்திரிகைப் பழம், மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, ஏலரிசி, லவங்கப் பட்டை இது எல்லாம் விராகனிடை கூட்டி இடித்துச் சூரணம் செய்து ஒரு பாக்களவே உள்ளுக்கு கொள்ளவும். இருபது நாள் தின்னவும். இதற்கு சூலி நிற்கும். தப்பாது. பத்தியமில்லை.

மலட்டு வலிக்குக் குளிகை:-

கழற்சிக் கொழுந்து அதின் பட்டை அதின் பருப்பு ஒரொன்றுக்கு விராகனிடை.க, பதிகேந்த ரேகு, வெள்ளுள்ளி விராகனிடை.உ, பெருங்காயம் பயறு மருவாதி நவச்சாரம் விராகனிடை.க, இது எல்லாம் தண்ணீர் படாமல் அரைத்துச் சிறு உருண்டை செய்து அதிக வலி எடுத்தால் மூன்று நாளும் இந்த மருந்தைக் கொடுக்கவும். இதற்கு மிளகு சாரம் சோறு தின்னவும். வெந்நீர் கையில் தொடவும். மலட்டுப் பூச்சு செத்து விழும். சூலி நிற்கும்.

வயிற்றிலே பிள்ளை செத்தால் மருந்து:-

கல்கம் வேர், நாயுருவி வேர் அரைத்து ஒரு வெந்நீரில் கரைத்துக் கொடுக்கவும். பிள்ளை விழும்.

கள்ளப் பிள்ளை விழ மருந்து:-

ஏலம், சுக்கு, துளசி இலை கொத்து வந்து உரலில் இடித்து வெந்நீரில் பிசைந்து வடிகொண்டு இந்தக் கடைச் சரக்கை அரைத்துக் கூடப் போட்டுக் கலந்து உள்ளுக்கு கொடுக்கவும். பிள்ளை செத்து விழும். ஒரு மாதம் நின்று இருந்தால் ஒரு நாள் கொடுக்கவும். ரெண்டு மாதம் நின்றால் ரெண்டு நாள் கொடுக்கவும். இப்படிக் கண்டுப் பார்த்துக் கொடுக்கவும். இது கை கண்டது.

பிள்ளையில்லாதவர்க்கு மருந்து:-

வசம்பு, வெள்ளுள்ளி, மிளகு, குப்பை மேனியிலை அரைத்துக் கொடுக்கவும். தலை முழுகிப் போனவள். மூன்று நாள் ஆலமரக் கொழுந்து ஒரு பிடி, கம்பரிசி அரைப்படி இந்த ரெண்டும் இடித்துத் தின்னவும். இந்தப்படி மூன்று நாள் தின்னவும். இதற்கு சூலி நிற்கும். இது கை கண்டது.

மாசு விழாதவர்க்கு மருந்து:-

சிறுகீரை வேரைப் பிடுங்கி வந்து ஒரு பிடி சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் வார்த்து அதை வேக வைத்து அதை இறக்கி ஆற விட்டுப் பிசைந்து அந்தத் தண்ணீரை அரைப்படி உள்ளுக்குக் கொடுக்க மாசு விழும். இது கை கண்டது.

பிரமியத்துக்கு மருந்து:-

சங்கம் வேர்ப் பட்டை, சிறந்தி நாயகம், மிளகு, தக்காளி, நல்ல சீரகம், கருஞ்சீரகம், நெல்லிப் பட்டை, முள்ளிப் பட்டை இது எல்லாம் ஒரொன்றுக்கு விராகனிடை அரைத்து அரிசிக் கசாயம் விட்டுக் கலந்துக் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொள்ளவும். பிரமியந் தீரும். இதற்கு புகை புளி உப்பு ஆகாது.

வெள்ளைக்கு மருந்து:-

அரசம் பட்டையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் நற்சீரகம் ஈர வெங்காயம் அரைத்துக் கூடப் போட்டு பிசைந்து வடிகட்டி ஒரு பலம் சர்க்கரை கூடப் போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். இதற்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வெள்ளை தீரும்.

எல்லா வாதத்துக்கு மருந்து:-

எருக்கம் வேர் நாட்டு முருங்கை வீட்டு முருங்கை வேர், தேவதாரம், பச்சை மஞ்சள், நிலக்கடம்பு, சதுரம் கரு வெள்ளாட்டு கோமியம் இது எல்லாம் ஒரு நிறையாய் எடுத்து சிறுநீரில் அரைத்து எண்ணையும் வார்த்துக் கோமியம் விட்டுச் சாரித்து பூசவும். இந்தப்படி மூன்று நாள் பூசவும். எல்லா வாதமுந் தீரும்.

மேகத்தின் பேரில் கண்ட வெள்ளைக்கு:-

நத்தம் நரிசு பொரித்துக் கொள்ளவும், செங்கல் பொடி வேறு தரம் வடிகொண்டு ஒரு நிறையாய் நிறுத்து பாகிலைச் சாறு வார்த்து அரைத்து நீர் சுண்டிய பதத்தில் பசுவின் வெண்ணை விட்டு இழைத்துக் கண்ணில் போடவும். இந்த முறைக்கு எ

போடவும். இதுக்கு மேகத்தின் பேரில் கண்ட வெள்ளை தீரும்.

<u>நாசிகா_புறைம்:-</u>

சீனிக் காரம் ஆகேக் திப்பிலி சுன்னாம்பு ஓமொரான்ப வராகனிடை.க, வெள்ளைச் சுண்ட வேர் வராகனிடை.6 இவ வெல்லாம் காய விட்டு சூரணம் பண்ணி வைத்துக் கொள்ளவும். ஒரு பணவிடை நாசியில் விட்டால் நூபிரந் தும்ம லெடுக்கும். இதுக்கு சன்னி வெள்ளப்பட்டது தீரும்.

<u>அரையாப்புக்கு_எண்ணை:-</u>

ரசம் வராகனிடை.க, நெல்லிக்காய், கெந்தகம் வராகனிடை.4, வெற்றிலைச் சாறு படி.¼, விளக்கெண்ணை படி.¼ இதை யெல்லாம் அரைத்துச் சீலையிற் பிடித்து திரியாய்ப் பிடித்து அந்தத் திரியைச் சொரூபத்திலே தயிலம் விழும். அந்த தயிலத்தைப் புண் வாயிலே போடவும். சீலை மேலே போடவும். அரையாப்புத் தீரும்.

<u>நச்சான் விடத்துக்கு_மருந்து:-</u>

வில்வப் பழத்து உள்ளே வராகனிடை.க, மலை கிருவை இலை பிடி.க, ஆவாரந் தழை பிடி.க, ஈர வெங்காயம் பிடி.க, நாலையும் இடித்து எருமை மோரில் பிசைந்து கொடுக்கவும் தீரும்.

<u>விடத்துக்கு_பழனிமை:-</u>

சுந்திர நாபி, நெரிவிசும், மனோசிலை, அரிதாரம், இந்துப்பு, பெருங்காயம், வீரம், நெல்லிக்காயக் கெந்தகம், ஓமொரான்சக்கு வராகனிடை.உ, இதுக்கு நேர்வாளம் வராகனிடை.30, கருப்புட்டி வராகனிடை.16, தேங்காய் கொட்டைக்கச்சில் சரி வராகனிடை.16 இதை யெல்லாம் சமனெட்டி வெளிப் பருத்திச் சாறு விட்டு ஒரு நாள் அரைக்கவும். ஒவ்வொரு சாமம் அரைக்கவும். நீர் வற்றின பிறகு தேங்காய் நெய் விட்டு அரைக்கவும். எட்டா நாள் வழித்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும். இந்த மையை விரியன் கடி முதலான விடத்துக்கு ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். பேய் நாய், பேய்நரி கடித்தால் ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். மாட்டுக்கு சொக்கு விஷம் கண்டால் ஒரு பணவிடை நாக்கில் தேய்த்துத் தண்ணீர் வார்க்கவும். இந்த மருந்துக்கு பத்தியம் ஒருத்து அன்றைக்கு உப்பு, புளி தவிர்க்கவும். வெந்நீரும் சோறும் கொள்ளவும். மறுநாள் பத்தியம் முறிக்கவும். கண்டமாலை வடுத்திரம் நாகுச்சம் முலைக் குத்துக்கும் தாமரைச் சிலந்திக்கு இதுக் கெல்லாம் உள்ளுக்கு ஒரு பணவிடை கொடுக்கவும். இப்படி மூன் நாள் கொடுக்கவும். ஒரு பணவிடை மை பொருத்தச் சீலையில் தடவிப் புண் மேலே போடவும். இப்படி மூன்று நாள் போடவும். ரணம் அரிப்பு பட்டதெல்லாம் பிளிச்சி விழும். தீரும். இது கை கண்டது. இது பொய் போகாது..

<u>கண்டமாலை_எட்டிப்பட்டதுக்கு_எண்ணை:-</u>

வெள்ளைக் குங்கிலியம் வேப்பம் பட்டை ஓமொரான்சுக்கு வராகனிடை.க, வேப் பெண்ணை அரை உழக்கு இந்த மருந்து ரெண்டையும் இந்த எண்ணையில் போட்டு காய்ச்சி மெழுகு பக்கத்தில் வடித்து மறுநாள் புண்ணுது மேலே சீலையில் பிடித்துப் போடவும். புண் வாயிலும் தடவவும். இப்படிக்கு மூன்று நாள் போடவும். எந்தப் புண்ணுக்கு போட்டாலும் ஆறிப் போகும். இது கை கண்டது. இது முக்கியமாய்ச் செய்து பார்க்கவும். இதில் பலன் உண்டு. இது முக்கியமாய்ச் செய்து பார்க்கவும். இதில் பலன் உண்டு.

<u>மேக_சன்னிக்குப்_புல்லுருவிக்_கற்பம்:-</u>

எட்டி மேல் புல்லுருவியைக் கொண்டு வந்து நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ளவும். மேக சன்னி தீரும். தீராவிட்டால் தேனில் கொள்ளத் தீரும். மேக வாய்வுக்கு சுக்கு கஷாயத்தில் கொள்ளத் தீரும். அண்ட வாய்வு அந்திர வாய்வுக்கு ஆவாரம் பட்டை வெட்டி வந்து கஷாயம் வைத்து இந்தச் சூரணம் ஒரு வராகனிடை போட்டுக் கொடுக்கவும். இப்படிக் கால் மண்டலம் கொடுக்கவும். இந்த வாய்வுந் தீரும். இதுக்கு இச்சா பத்தியமா யிருக்கவும். அவ பத்தியமா யிருப்பது ஆகாது.

<u>நேத்திர_வாய்வுக்கு_எண்ணை:-</u>

நல்லெண்ணை படி.க, மிளகு படி.¼, ஆகண்டர் தழைச் சாறு படி.¼, அமுக்கிராச் சாறு படி.¼, மிளகு தக்காளிச் சாறு படி.¼, இவை மூன்றும் எண்ணை யில் விட்டு அடுப்பில் வைத்து தண்ணீர் வண்ட வேக விட்டுப் பதத்தில் மிளகு நசுக்கிப் போட்டு இறக்கிக் கஷாயத்தில் வடித்து ம நாள் முழுகவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் முழுகவும். இப்படி மூன்று நாள் முழுகவும். தீரும் வியாதி நேத்திரம் மண்டை இடிப்பு; கண் சிவப்பு தீரும்:

<u>சன்னிக்_குழம்பு:-</u>

கற்பன் கடுக்கா யிந்துப்பு நற் பெருங்காயம் நல்ல வெங்காரம் மெய்ப்புள்ள கெந்தகம் மேவும் மனோசிலை திப்பிலி அரிதாரம் கருஞ் சீரகத்துடனே ஒப்புடன் கடுகுரோகணி நாவி அப்படி மருந்து அதில் பனிரெண்டு யிப்படி நேர் வாளம் இதுக்கு சரி சமம் கட்டி ஒப்புடன் நஞ்சு உயிர் முளை வாங்கி நல்லா யிா

வறப்பாய் அஞ்சாமல் வரத்வச் சூரணம் செய்து வஞ்சியாம் பனிலைச் சாத்திலொரு நாள ரைத்த கொச்சிய தென்னங் குடுக்கைக் கரிகாத் அஞ்சு விராகனிடை அத நிறை கருப்புக் கட்டி அஞ்சிய தேங்காய்ப் பாலிலொரு நாளரைந்து மிஞ்சிய பதத்தில் முட்டைச் சிமிளிலடை, வரும் பிணி நோய்கள் வகைதனை அறிந்து உந்த வைபானம் உரைத்திடக் கேளீர் - வெள்ளை அக்கிரங்கள் விதம் மேகம் சுரந்த அக்கிரங்கள் கூட மெரு தோஷத்துக்கு நாவிற் பனவினை நன்றாகத் தேய்த்து வெகு வெள்ளீர் குடிநீர் குடிப்பீர் சப்பிலே தோஷம் சன்ன சுரமும் வெள்ளீரில் கொள்ள விட்டாலும் போதுமே கடுக்காய்க் கஷாயத்தில் காசிடை கொள்ள யிருக்கும் சுரமும் யிருபதும் தீரும் முருங்கை குளிர் மூதேவிச் சுரம் அருக்கூச் சுரமும் அல்லாம் தீரும் கொள்ளைக் கொத்தி ஆரு கடுக்காய்ப் பொடியில் எள்ளை நூலைப்பால் தொடல் கொடுக்கச் சன்ன பிருமல் சங்கடர் தீரும் உச்சிரமாகும் சிச்சிலிப் பட்டையில் மெச்சிய குளம்பு ஒரு விராகனிடை யிட அச்சினம் செயம் அப்புடன் தீரும் சுத்தி குன்மம் தகரை கஷாயத்தில் பித்த குன்மம் பிணி வெலைக் கஷாயம் வாய்வு குன்மம் வல்லாரைக் கஷாயத்தில் எரி குன்மம் செய்விச்சம் பழத்தில் பசித்திய குன்மம் பசுவின் மோரில் அட்ட வாதம் ஆட்டுப் பாலில் பசிய பொருமல் பச்சைத் துலைகள் தின்று விடும் பசுவின் நெய்யில் செயம் பெறக் குடிப்பீர் குன்றி நோவு குலை வலி எரிச்சல் கிர்ரிடும் பசுவின் நெய்யில் செயம் பெற கொடுப்பீர் கல்கண்டு சர்க்கரை காசிடை இளநீர் மெப்புடன் உபட்டனத் தீரும். துலை பனிவெட்டுக்கும் பறங்கிப் பட்டைக் கஷாயத்தில் காசிடை குழம்பு பிலைநடன் கொடுப்பீர். கருவிளி சுக்கு மிளகுடன் மிளகு சீரகம் கஷாயத்தில் செயம் பெறக் கொடுக்க ஓதக வாயு சுக்குடன் தீரும் நல காய்வு நாகக்கும் நக்கு வலிகள் காலமே பசுவின் நெய்யில் சாருடன் கொடுப்பீர் ரத்த மூலத்துக்கு நயனத் சீலைக்குக்கு மெத்தப் பாலிடை குழம்பு விருதடன் மேல் தொடர்ச்சி அருத்த பேரு இல்லை).

<u>விடத்துக்கு குளிகை:-</u>

வரிக் கூமட்டிக்காய் நாக கொக்கு வந்த நாளாக அதை புதுப் பானையில் போட்டு வேகவைத்து தூரவிட்டு புளிந்த அதின் ரசம் படி.உ, சிறுகுறிஞ்சா வேர் இடித்துச் சூரணம் படி.க, தலை சுருளைத் தழையும் குப்பை மேனித் தழையும் ரெண்டையும் இடித்துச் சாறு பிழிந்து இந்த மருந்தை எல்லாம் கூடப் போட்டுப் பிசைந்து வைத்து ஏழு நாள் ஏழு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் சுண்டைக்காய் பிரமாணம் குளிகை சேர்த்து வைத்துக் கொண்டு சகல விடத்துக்கும் பிரியக் கடி முதலானதுக்கும் ஒரு உருண்டை வெந்நீரில் கொடுக்கத் தீரும். எலி கடிக்கு சாறுடன் மிளகு அந்த மருந்து அரைத்துக் கொடுக்கத் தீரும். மாடு சொக்கிறதுக்கு உரைத்துக் கண்ணிலிடவும். எட்டி ஒரு மை தின்ன பேருக்கு உரைத்துக் கண்ணிலிடவுந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>சகல மாந்தத்துக்கும் குளிகை:-</u>

பெருங்காயம் விராகனிடை.௪, ஓமம் விராகனிடை.உ, நல்ல சீரகம் விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, கடுகு விராகனிடை.௪, ஒரு சட்டைப்பூ விராகனிடை.8, வெள்ளைப் பெருங்காயம் விராகனிடை.௪, வசம்பு விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.4 கடுகு ரோகணி விராகனிடை.௪, திப்பிலி விராகனிடை.உ, மிளகு தக்காளி இலை பிடி.உ, வெலிப் பருத்தி இலை பிடி.உ, பாவட்டை இலை பிடி.உ, இந்தத் தழை யெல்லாம் அரைத்து வடித்துக் குடைச் சாறும் அரைத்து இந்த மருந்தையும் கூடக் கலக்கி அரைத்து தாக்கு வேர்க்காய்ப் பெருமன் குளிகைப் பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு மாந்தத்துக்கு இள வெந்நீரிலிடவும். சீத மாந்தத்துக்கு ஓமக் கஷாயத்திலிடவும். அக்கினி மாந்தத்துக்கு சீரகக் கஷாயத்திலிடவும். கழல் மாந்தம் பிள்ளைக்கு வெந்நீரிலிடவும். நெஞ்சு குளிக்க மேழுகுத் தலைனை இடவும். இந்தக் குளிகைக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>அமரத்துக்கு மருந்து:-</u>

நாய்ப் பாகல் இலையைப் பறித்து வந்து வாய் பேசாமல் கசக்கி உச்சியில் கடலி நூல் பிள்ளையானால் வெகு கையிலும் இடது காலிலும் பிடிக்கே கடலி மனிதர் காலமே எதிர்த்து போடவும். அந்தியோடே குத்த தண்ணீரில் சீலையை தோய்த்து பிழிந்து அந்தச் சீலையை உச்சியில் அடைக்கவும். இந்தப் பிரகாரம் ௩ நாள் தேய்க்கவும். இது கை கண்டது.

<u>கருவுக்கு எண்ணெய்:-</u>

நகரை பழம் பாசி, வில்வம், மொசுமொசுக்கை, சிறுபுள்ளடி, மிளகு, தக்காள வல்லாரை இந்த மருந்து எல்லாம் இடித்துப் பிழிந்த சாறு படி.க, ஈர வெங்காயம் அரிந்து உழக்கு.க, இஞ்சி கடைச் சரக்கு சாதிக்காய், கிராம்பு, அதிமதுரம், சாயில்லிங்கம், கொத்தமல்லி, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய் ஒவ்வொன்றுக்கு விராகனிடை.க, வறந்த அக்கின விளக்கெண்ணெய் படி.க, இந்தச் சாமம் வெங்காயமும் கட்டி வேக வைத்துப் பதத்தில் கடை சரக்கை அரைத்துப் போட்டுத் தைலப் பதத்தில் இறக்கி சீலையக்கில் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெய் ஒரு கரண்டி உள்ளுக்கு கொடுக்கவும். ஒரு நாளைக்கு இரண்டு தரம் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி மாந்த கணை சிறுகணை, ரெத்தக் கணை, மீசிக் கணை, வறட்சணை, இரைப்பு, பிறைப்பு இது முதலான யெட்டுக் கணையுந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>இறந்திக்கு எண்ணெய்:-</u>

வறந்த அக்கின விளக்கெண்ணெய் படி.க, வெருகங் கிழங்கு பருப்பு போலே நறுக்கின படி.௪, ஈர வெங்காயம் உரித்தது படி.௪, இஞ்சி கடைச் சரக்கு பறங்கிப் பட்டை பலம்.க, வசிலிகை சங்கங்குப்பி, கருதலை, வெள்ளருகு, சிவனார்

வேம்பு ஆக நாலும் ஒரு நிறையாய் எடுத்து இடித்துச் சாறு பிழிந்து இது படி.உ, இந்த சாற்றில் வெங்காயம் கிழங்கு கூடப் போட்டு எண்ணெயும் வார்த்து அடுப்பில் வைத்து ஒரு விறகாய் எரித்து மெழுகு பதத்தில் இந்தப் பட்டையை நறுக்கிப் போட்டுக் கலக்கி இறக்கி கலையத்தில் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெ கொடுக்கிற போது ஞாயற்றுக்கிழமை நாள் அரை உழக்கு வடித்துக் காலமே கொடுக்கவும். மூன்று நாள் கால் உழக்கு கொடுக்கவும். மறுநாள் அரைக்கா உழக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் எண்ணெ குடிச்சது. மூன்று நாள் மறு பத்தியம் மூன்று நாள். வெந்நீரும் சோறும் குடிக்கவும். இப்படிப் போய் ஏழா நாள் பத்தியம் முறிக்கவும். கிறந்தி எழுந் தீரும். இது கை கண்டது.

<u>ஒதுகத்தின் மேல் உதிர வாய்வுக்கு மேல் வீக்கத்துக்கு மருந்து</u>:-

சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காயம், புடலம் பழம் ஒன்றுக்கு விராகனிடை.க இதை ஐந்தும் கூட்டி வெந்நீர் அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன் நாள் கொடுக்கவும். பத்தியமில்லை. உதிர வாய்வு தீரும்.

<u>உதிரம் விழுந்த மேல் வீக்கத்துக்கு மருந்து</u>:-

சங்கம் வேர் தட்டினது படி.½, வெள்ளாட்டுக் கோமியம் படி.½, கடுக்காய்.5, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, இது ஐந்தும் கோமியத்தில் போட்டு மூன்று நாள் ஊற விட்டு நாலாம் நாள் அதை விட்டு இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது வெந்நீரில் கொள்ளவும். இதுக்கு பத்தியமில்லை. தீரும் வியாதி உதிர வாய்வு, பெரும்பாடு, உதிரத்தின் மேல் மேல் வீக்கம், காமாலை, சோகை இது முதலான வியாதி யெல்லாம் தீரும். புகை, புளி எட்டு நாள் தவிர்க்கவும்.

<u>விப்புருதி நாலுக்கு மருந்து</u>:-

கல் குழஞ்சியிலை பிடி.க, புளியம் பிறண்டைக் கிழங்கு பலம்.½, பர்லுபாகல் கிழங்கு பலம்.½, ஆகாசக் கெருடன் கிழங்கு பலம்.½, உழக்கு மஞ்சி கிழங்கு பலம்.½ இது வெல்லாம் உரலிலேதுவைத்து நிஎருமை மோரில் பிசைந்து வடிகட்டி அதை உலை வைத்துக் கருங் குறுவை அரிசியில் சோறாக்கி நல்லெண்ணெ நெய் வார்த்துக் கருப்புக் கட்டி போட்டுத் தின்னவும். ஆடு தரத்தி வேர் இந்த மருந்திலே கூடப் போட்டு கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. எழாம் நாள் முறிக்கவும். விப்புருதி தீரும். ஒதுகத்தின் மேல் விகாளத்துக்கு.

<u>உதிரம் காணுகிறதுக்கு மருந்து</u>:-

மூக்கொளிஞ்சி பிடி.க, பழங்கிட்டம் கொண்டு வந்து நறுக்கின தூள் படி.க, வெள்ளாட்டுக் கோமாரி படி.உ, புதுச் சட்டியில் இந்த மருந்தைப் போட்டு கோவாரியும் ஊத்தி அந்தச் சட்டி வாய்ப் பாட்டிலே சீலை வடி கட்டி சூரியன் கிளம்பி வரும் போது எடுத்து வெய்யலில் வைத்து பொழுது போக எடுத்து வீட்டில் வைக்கவும். இந்த மருந்தை அரை உழக்கு இரத்து உள்ளுக்கு கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். ஒதுகத்தின் மேல் வீக்கம் காச்சல் இது தீரும். இது கை கண்டது.

<u>கரப்பானுக்குச் சூரணம்</u>:-

செங்கத்தாரிப் பட்டை, அமுக்கிலாங் கிழங்கு, சங்கம் வேர், சங்கங் குப்பி வெள்ளருக்கு, சிவனார் வேம்பு, ஆயில் பட்டை, பிச்சங் கொட்டை வேர் இவை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து காய விட்டுச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு கரப்பானைப் பட்டதுக்கு வெருகடிப் பிரமாணம் தின்னவும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>கரப்பானுக்குச் சூரணம்</u>:-

<u>புழு வெட்டுக்கு</u>:-

கடுக்காய் கொண்டு வந்து உடைத்து விரை வாங்கிப் போட்டு அந்த ஓட்டில் காரெள்ளு யிட்டு அந்த ஒரு கொண்டு மூடி அதின் மேல் மஞ்சள் அரைத்து மேலே போத்தி வேலிப் பருத்தித் தழை அரைத்து அதின் மேலே மூடி அதில் மண் சீலை செய்து காய விட்டு எருவு அடுக்கி அதின் மேல் வைத்து அதின் மேல் எருவு அடுக்கி புடமிட்டு வெந்த பிறகு எடுத்து ஆற விட்டு அந்த மேல் மருந்தை தள்ளிப் போட்டு கடுக்காய் எழு சந்தனம் போலே அரைத்து கலத்தின் மேலே வைத்துப் பசுவின் வெண்ணெ போட்டு இழைத்து சிமிலிப் வழித்துத் தடவ புழு வெட்டுத் தீரும்.

<u>அதிசாரக் கழிச்சலுக்கு, வயத்துக் கழிச்சலுக்கு மருந்து</u>:-

காம்பில் வேர், நல்ல கொளிஞ்சி வேர், கல் கொளிஞ்சி வேர் மூன்றும் தட்டிப் போட்டு சட்டியில் ஒரு படி தண்ணீர் வார்த்து வேக விட்டு தண்ணீர் கால்படி யாக இறக்கி வைத்துக் கொள்ளவும். அதின் பிறகு வசம்பு காசிடை.க, மலைதாங்கி காசிடை.க, இரண்டும் சீலை சுத்தி நெருப்பு மேலே வைத்து வெந்த பிறகு அதை எடுத்து இந்தக் கசாயம் இரத்து இந்த மருந்தை அரைத்துக் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்கு அதிசாரம் கழிச்சல், சுரம் இது முதலானதெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் மூன்று நாள் வெந்நீரும் சோறும் உண்ணவும். நாலா நாள் பத்தியம் முறிக்கவும்.

<u>வயத்துக் கடுப்புக்கு மருந்து</u>:- 2.1.64.

ஓமத்தை வறுக்கிற போது ஒரு களச்சிக்காய் மடிவாதி கருப்புட்டி அந்த சட்டியில் போட்டுக் கிளரி முறுத்தில் போட்டு மூன்று உருண்டையாக உருட்டி நேரம் ஒரு உருண்டை தின்னவும். இதுக்கு சீதளக் கடுப்புத் தீரும்.

<u>வெள்ளை சீதளமாய்க் கடுக்கிற கடுப்புக்கு</u>:-

ஒரு சுக்கு எடுத்து நெருப்பின் மேல் வைத்து கருகின பின் அதை எடுத்து மேல் புறணியை சுறண்டிப் போட்டு அரைத்து கறண்டியில் கலக்கித் தயிர் கூட்டித் தின்னவும்.

<u>காச்சலுக்கு தாப சுரத்துக்கு சங்கர வயிரவன் குளிகை</u>:-

துத்தம் காசிடை.8, நாவி காசிடை.7, கெந்தகம் காசிடை.6, வெங்காரம் காசிடை.5, ஊமத்தை விரை காசிடை.4, சுக்கு காசிடை.3, திப்பிலி காசிடை.3 இது வெல்லாம் சேர்த்து வேலிப் பருத்திச் சாறு விட்டு அரைத்து குன்டுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் காய விட்டு சிமிழில் அடைத்துக் கொள்ளவும். எந்த சுரமானாலும் ஒரு உருண்டை முலைப் பாலிலிட நாலு சுரந் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும்.

<u>ரச சிந்தாமணி</u>:-

ரசம், கெவுரி பாஷாணம், மனோசிலை, பச்சை நாவி, அரிதாரம் இதை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து வைத்துக் கொண்டு ஊமத்தஞ் சாறு வார்த்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி இஞ்சி சாத்திலிட எல்லாச் சுரமும் போம். வென்னீரும் சோறும் உண்ணவும்.

<u>பித்த சுரத்துக்கு சிந்தாமணிக் குளிகை</u>:-

கெந்தகம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, வெங்காரம் பலம்.க, பாகலிலைச் சாத்திலரைத்து சி பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் காய வைத்து இந்த உருண்டையை நொச்சியிலை ஒரு கடுக்காய் ரெண்டும் கசாயம் வைத்து அந்தக் கசாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கப் பித்த சுரந் தீரும்.

(வேறு)

இரதம் பலம்.க, கெந்தகம் பலம்.க, நேர்வாளம் பலம்.க, திப்பிலி பலம்.5, இது வெல்லாம் எலுமிச்சஞ் சாறு விட்டு அரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாத்திலாவது குளிர்ந்த தண்ணீரிலாவது இடவும். வாத சுரத்துக்கு ஆடா தோடைச் சாத்தில் கொடுக்கவும். இல்லாவிட்டால் செம்முள்ளிச் சாத்தில் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வென்னீரும் சோறும் கொள்ளவும்.

<u>வாத சுரத்துக்கு ஆனந்த வயிரவன்</u>:-

சாதிலிங்கம், வெங்காரம், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலிவேர், இதை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்தி இஞ்சி சாத்திலரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு இஞ்சி சாத்தில் ஒரு உருண்டை இடவும். சொன்னபடிக்கு தீரும்.

<u>வாத சுரத்துக்கு சன்னிகா சிந்தாமணி</u>:-

சாதிலிங்கம், நாவி, சுக்கு, திப்பிலி, மிளகு, வெங்காரம், இதை யெல்லாம் ஒரு நிறையாய் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை யிஞ்சிச் சாத்திலிட வாத சுரம் தீரும்.

<u>வாத சுரத்துக்கு திரிலோக சிந்தாமணி</u>:-

இரதம் பச்சை கெந்தகம், அரிதாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், மனோசிலை, துத்தம், திருகு, நேர்வாளம், கடுக்காய், கடுகுரோகணி இது வெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து கையாந்தகரைச் சாத்தி லேழு நாளரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு திப்பிலி கசாயத்திலாவது இஞ்சி கசாயத்திலாவது இட எந்தச் சுரமுந் தீரும். இந்தக் குளிகைக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வென்னீரும் சோறும் மூன்று நாள் கொள்ளவும். நாலா நாள் பத்திய முறிக்கவும்.

(வேறு)

பூசணி விரையும் பெருங்காயமும் காடியிலரைத்துக் கொடுக்கவும். குளிர் சுரம் தீரும். இது கை கண்டது.

<u>தாப சுரத்துக்கு குடிநீர்</u>:-

தேவதாரம், நிலவேம்பு, திப்பிலி, திப்பிலி மூலம், சிறுதேக்கு, சுக்கு, பற்படாகம் ஆடாதோடை முத்தக்காசு ஒரொன்றுக்குக் காசிடை கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். தோஷ சுரம் விடும்.

<u>பழஞ் சுரத்துக்கு குடிநீர்</u>:-

கொத்தமல்லி, சூரிப் பழம், புளி வில்லை வேர் இது குடிநீரிட்டுப் பிசைந்து வடித்து கருப்புட்டி கூட்டி கொடுக்கவும்.

<u>விரோசனத்துக்கு குடிநீர்</u>:-

கடுக்காய், களிப்பாக்கு, சுக்கு, இந்துப்பு, சாறணை வேர், பிரமி,

கொன்றைப் பட்டை அதின் தளிர் காசாக் கருகு, கடுரோகணி, வெள்ளறுகு இலை சமன் கூட்டி காடியும் விட்டுக் கொடுக்க வயிறு கழியும். இதக்கு முறிவு தயிருஞ் சோறும் உண்பது.

<u>விரேசனத்துக்கு_சூரணம்:-</u>

நெல்லி வித்து, ஏலம், லவங்கம், நாகப்பூ ஒரொன்றுக்கு விராகனிடை.3, மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு சரி சர்க்கரை கூட்டி இள வெந்நீரில் கொள்ள சீதமுள் படக் கலபம். இதக்கு முறிவு மோரும் சோறும் கொடுக்கவும்.

<u>வாத_சுரத்துக்கு_குடிநீர்:-</u>

சித்தமுட்டி, பேராமுட்டி, கண்டங்கத்திரி, விஷ்ணு காந்தி, பெருங்காயம் சுக்கு, மிளகு வேலிப் பருத்தி வேர், வில்வ வேர், நெருஞ்சி வேர், முன்னை வேர் ஒரொன்றுக்கு பலம்.உ, இடித்து திட்டமாய்க் கட்டி க் கசாயம் போட்டுக் கொடுக்கவும். தோஷ சுரந் தீரும்.

<u>இருமலால்_எடுத்த_சுரத்துக்கு_குடிநீர்:-</u>

கண்டங்கத்திரி, ஆடாதோடை, விஷ்ணு காந்தி, எலுமிச்சம் வேர், முத்தக்காசு, கொடிவேலி வேர், சந்தனம் இது வெல்லாம் கூட்டி ஒரு நிறையாய் கசாயம் வைத்து கொடுக்கவும். இருமல் சுரம் தீரும்.

<u>பால_சுரத்துக்கு_குடிநீர்:-</u>

கடுக்காய்ப், பேய்ப்புடல், முத்தக்காசு, கொத்தமல்லிகை, சீந்தி தண்டு நெல்லிப்பட்டை, தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இது வெல்லாம் சரி நிறையாய்க் கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். பல சுரந் தீரும். இது கை கண்டது.

<u>சீத_சுரத்துக்கு_குடிநீர்:-</u>

பேய்ப்புடல், முத்தக் காசு, பற்படாகம் சீந்தி தண்டு, சுக்கு, கடுகு ரோகணி, கடுக்காய் இலை சமன் கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். வயிறு பேதிக்கும். சுரம் விடும். பேராமுட்டி வேர், பேய்ப்புடல் சுக்கு இலை சமன் கூட்டிக் கொடுக்கவும்.

<u>அதிசாரத்துக்கு_குடிநீர்:-</u>

புங்கம் வேர், ஓமம், கரம்பில் வேர், கொளிஞ்சி வேர், வசம்பு, மலை தாங்கி வேர். இவை ஒரு நிறையாய்க் கூட்டிக் கசாயம் வைத்து கொடுக்கவும். அதிசார சுரந் தீரும். இதக்குப் பத்தியம் கடினமா யிருக்கவும். வெந்நீரும் சோறும் கொள்ளவும்.

<u>ஞன்மத்துக்கு_மருந்து:-</u>

தேங்காய் கண் திறந்த தண்ணீர் வடித்திப் போட்டு மிளகு வெள் வெங்காயம், கடுகு ஓமம் கொளிஞ்சி வேர் இவை யெல்லாம் அரைத்து தேங்காயில் போட்டு வெள்ளாட்டுப் புழுக்கையும் அதின் கோமியம் வார்த்து அரைத்த தேங்காய் தெரியாமல் பூசி அதைச் சுட்டு வெந்த காயை எடுத்து ஒட்டைத் தள்ளிப் போட்டு அந்த மருந்தை எடுத்து அரைத்து மூன்று நாள் தின்னவும். இதக்கு பத்தியம் வெள்ளாட்டுப் பால் வார்த்து சோறு தின்னவும். உப்பு, புளி ஆகாது. இதக்கு ஞன்மம் எட்டுந் தீரும். இது கை கண்டது.

<u>ரச_செந்தூரம்:</u>

ரசம் பத்துக் கழஞ்சு, கெந்தகம் இருபது களஞ்சு, பாலரசம் பட்டை சாறு வார்த்து அரைத்து ரெண்டு சாமமரைத்து காசிக் குப்பிக்குள்ளே வைத்து குப்பி வாயைக் களிமண் கொண்டு மூடி அதின் மேலே ஏழு சீலை மண் செய்து உலர வைத்துப் பானை யிலே மண்ணிட்டு நடுவே குப்பியைவைத்து கீழும் மேலும் மண்சீலை செய்து அடுப்பிலே வைத்துப் பானைத் தாரிலே இரண்டு சாமம் விளக்குப் போலே எரிக்கவும். இரண்டு சாமம் தாமரைப்பூப் போலே எரிக்கவும். அப்பால் இரண்டரை நாள் இரண்டு பந்தம் போலே எரிக்கவும். அதின் பிறகு ஆறவிட்டுக் குப்பியை எடுத்துப் பார்த்தால் செந்தூர மாயிருக்கும். அதை எடுத்து ஒரு பணவிடை தேனில் கொள்ளக் குன்ம மெட்டும் போகும்.

<u>தாளிசை_பத்திரிச்_சூரணம்:-</u>

தாளிசை பத்திரி, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சுக்கு, கண்டுபரங்கி, வாய்விளங்கம், தம்பராஉட்டகம், மிளகு, லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, விலாமிச்சை வேர், வெட்டிவேர் ஒரொன்றுக்கு விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, இது வெல்லாம் சூரணம் செய்து நல்ல வெல்லம் ஒரு அச்சுக் கலந்து வைத்துக்கொண்டு இதக்குத் தீரும் வியாதி மேக வெட்டை, பித்த வெட்டை, பயித்தியம், வெள்ளை சோகை முதலானதுந் தீரும். இதக்குப் பத்தியமில்லை.

<u>அரிதார_பற்பம்:-</u>

அரிதாரத்தைச் சிறுக உடைந்து மருவாதி நருக்கி மெல்லிய சீலையில் முடிந்து மூன்றரை நாழிகை காடியில் போட்டு காடி வத்தக் காய்ச்சி எடுத்து கோமூத்திரம் விட்டரைத்து எருக்கிலை தொன்னை வைத்தி மூடி புரசஞ்சிராய் சுட்டு நீற பண்ணி அந்த நிறை தொன்னை மருந்திலே சத்து போட்டு மிஞ்சின மருந்தைச் சட்டியிலே போட்டு

அதின் மேலே தொன்னையை வைத்து தொன்னை தெரியாமல் நீர் கொண்டு மூடி மேலும் மண் சட்டியினாலே மூடி பொருந்தச் சந்து வாய்க்குச் சீலை மண் செய்து தொன்னூறு நாழிகை விளக்கெரிக்கிறது போலே எரிக்கவும். பின்பு எடுத்துப் பார்க்கில் சூரணமாயிருக்கும். இதுக்குத் தீரும் வியாதி குலைக்கு ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். சன்னிக்கு திரிகடுகு சூரணம் பண்ணி தேனில் கொடுக்கவும். மகோதரம் பிரமியம் இதுக்கு தேனில் கொடுக்கவும்.

<u>லோக பற்பம்:-</u>

உருக்கு ஒரு பலம் சிவக்கக் காய்ச்சி மோர் காடி கோமூத்திரம் நல்லெண்ணை காவலோச் சாறு இதுகளிலே ஏழு தரம் இந்தப் பிரகாரம் காய்ச்சித் தோய்க்கவும். அரளாக அரைத்து இதில் நெல்லிக்காய்க் கெந்தகம் நாலு களஞ்சு இரதம் நாலு களஞ்சு மூன்றுங் கூட்டி கையாந்தகரைச் சாறு விட்டரைத்து கலசத்திலிட்டு ஒரு பொருந்த மூடிச் சந்து வாய் மூன்று சீலை மண் செய்து இதைப் புடமிட்டு எடுத்து திரும்பவும் கையாந்தகரைச் சாத்திலரைத்து இப்படி பத்து புட சுடவும். எருக்கிலைச் சாத்தில் பத்துப் புடமிடவும். இப்படி இருபது புடம் போட்டு எடுக்க நல்ல செந்தூரமாம். இதுக்குத் தீரும் வியாதி குன்மம், மகோதரம், சோகை வயத்து வலி, சன்னி, சகல வாய்வுக்கும் அநுபானத்திலிடவும். இதுக்கு பத்தியம் மூன்று நாள் உப்பு, புளி தவிர்க்கவும்.

(வே)

<u>மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

இரும்பைக் கொண்டு வந்து அதின் மேலே சர்க்கரை தேன் வெள்ளாட்டுப் பால் வார்த்து அரைத்து மூக்கில் விடவும் தீரும். இப்படி மூன்று நேரம் விடவும். இது கை கண்டது.

<u>கோரோசினை மாத்திரை:-</u>

சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கோரோசினை விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, கௌசௌசகனை நல்ல சீரகம் விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, கொத்தமல்லி விராகனிடை.க, வால்மிளகு விராகனிடை.க, இது வெல்லாம் சேர்த்து இளநீர் விட்டு அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு இந்த மருந்தை மிளகு கசாயத்தில் இடப் பித்த சுரந் தீரும். சுக்கு கசாயத்திலிட சிலேற்பன சுரந் தீரும். சீரக கசாயத்திலிடச் சோகை தீரும். எந்த வித வெட்டைக்கும் இளநீர் கொண்டு வந்து அந்த தண்ணீரிலிட உருண்டையை ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்கு புளி, புகை ஆகாது. இது கை கண்டது.

<u>வங்க பற்பம்:-</u>

பீய்யம் பலம்.உ, கரண்டியில் போட்டு நல்லெண்ணை சூத்தி உருக்கி அதின் பிறகு நல்லெண்ணை மோர் சாறணைச் சார் பச்சை மஞ்சள் சாறு ஒவ்வொன்றில் ஏழு பிரகாரம் உருக்கி அதின்-பிறகு-நல்லெண்ணை-மோர்-சாறணைச்-சார் சிறு பயறு போலே நறுக்கிக் கொள்ளவும். புளியின்சிராய் சுட்டுச் சாம்பலரைத்துக் கோளிப் பட்டியிலே கனக்கப் பூசி குளி குளியாகக் குழித்து ஒன்றுக்கு மருந்து ஒன்றாய் வைத்து பின்பு மறு கோளியப் பட்டியிலே அந்தச் சாம்பல் பூசி அந்தப் பொருந்த மூடி அதின் மேலே ஒரு பொருந்த மூடி சந்து வாய் சீலை மண் செய்து காய விட்டு எருவை அடுக்கி அதின் மேலே இந்த ஓட்டை வைத்து அதின் மேலே எருவை அடுக்கி புடம் போட்டு அதின் பிறகு எடுத்துச் சூரணம் பண்ணி வைத்து நரம்புவுக்கு ஆவாரைக்காய் கசாயத்தில் ஒரு பணவிடை கூட்டிக் கொடுக்கத் தீரும். உழலை மித்தால் வெண்ணை வெல்லத் திலிடவும். உழலைக்கு பச்சைப் பனை மட்டை நறுக்கி இடித்து குருணி நீர் விட்டு நாழியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். கொப்பளிக்கவும். இதுக்குங் கூட்டுங் கறி பிஞ்சி மாங்கிழங்கும் மோர், பால், நெய், புன்னக்கு யிலைக் கறி கூட்டவும். முருங்கைக் காய் கூட்டவும். கிறனிக்கு ஒரு பணவிடை வெள்ளாட்டுப் பால் வழக்வாழக் கிழங்கு கசாயத்திலிடவும். காடை கவுதாரி கூட்டவும்.

<u>மலட்டு வலிக்கு மருந்து:-</u>

ஆமணக்கிலைச் சாறும் எண்ணெயுங் கொடுக்கத் தீரும். கருப்புட்டி சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கழச்சிப் பருப்பு, இந்துப்பு வறுத்துப் பொடி பண்ணி சேர்த்துக் கூட்டி நல்லெண்ணையில் குழப்பித் தின்னவும். மலட்டு வலி தீரும். சூலி நிற்கும். இது கை கண்டது.

<u>ஊது காமாலைக்கு மருந்து:-</u>

வெள்ளாட்டுப் பால் படி அரை, குளவை அரிசி ஒரு சேரை அந்தப் பாலை உலை வைத்து இந்த அரிசியைப் போட்டுப் பொங்கிற போது மாவிலிங்கம் பட்டை விளாங்காய் அளவு அரைத்துக் கூடப் போட்டு வேக வைத்துக் கிளறி இறக்கி சூடாகத் தின்னவும். இந்தப் பிரகாரம் மூன்று நாள் தின்னவும் இதுக்குத் தீரும் வியாதி காமாலை, சோகை, ஊது காமாலை, பாண்டு ரோகம், நீர்க் கோவை மகோதரம் என்வப்பட்டதுக்கும் ஆகும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். இது கை கண்டது.

<u>ஏலாதி தயிலம்:-</u>

அத்தி ஆலா அரசு பிச்சி இது நாலுபி வகையும் முத்தப் பட்டையாக சிவந்தப் பட்டையாய் வெட்டி வந்து ஒவ்வொன்றுக்கு பலம்.8 இடித்து பிரு நாழி நீர் வார்த்து அதை எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் வெள்ளறுகு கத்தாளச் சாறு பிருநாழி எண்ணை பிருநாழி விட்டுக் கலந்து அத்தி முகிள் அரச முகிள் அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், பிறப்பைப்பூ, தாமரை வளையம், செங்களநீர்க் கிழங்கு, பேரிச்சம் பழம்,

செண்பகப்பூ, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, நாகப்பூ, பச்சிலை, நெய்தல் கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு, நன்னாரி ஒரொன்றுக்கு களஞ்சியாகக் கட்டிப் பால் விட்டு அரைத்து இரண்டு படி பால்விட்டு நாலு நாள்க் காய்ச்சி ஐந்தா நாள் வடித்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பிளவை, கிரந்திப் புண், நீரழிவு, உழலை, பித்த சன்னி, உடம்பு வீக்கம், உள்ளங் கால், எரிச்சல், நீர்க் கடுப்பு, நீர்க்கட்டு பிரமியம் சோகை, ஈளை இருமல் எலும்புருக்கி நோக்காடு ரெத்தப் பிரமியம் வாதம் என்பது இது முதலான வியாதி எல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் நெய், புகை, புளி சோளச் சோறு பறங்கிக்காய், முள்ளிக்காய், பாகல்க்காய், செம்பந்தட்டு, அரைக்கீரை, கீரை இது முதலானது நாற்பது நாள் ஆகாது. இது கை கண்டது.

__ஏலாதிச் சூரணம்:-__

சடாமஞ்சி, கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, வெட்டி வேர், விளாம்பிச்சு, கற்பூரம், கொத்தமல்லிகை, பேரிச்சம் பழம், சாதிக்காய், சாதிப் பத்திரி, அல்லிக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், முந்திரிக்காய், பழம், சந்தனம், கிகைநீர், தாளி வேர், நெருஞ்சி வேர், வெள்ளை சாறணை வேர், அமுக்கிலாங் கிழங்கு இந்த யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து காய வைத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு இதுக்குச் சரி சமன் சர்க்கரை கூட்டிக் கலந்து நெய்யில் வெருகடிப் பிரமாணந் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி க்ஷயம், வெட்டும் குன்மம் ஏழும் பிரமியம் ஏழும் நாலு உஷ்ணம், சோகைக் கட்டு, மேகம் வெட்டை பித்த சன்னி யிருமல் கண் புகைச்சல் முதலியது தீரும்.

__ராச பிளவைக்கு மருந்து:-__

கருப்புக் கட்டியைக் குழம்பு போலே கரைத்து புண் வாயிலிட்டு அதுமேலே சீலை போட்டுக் கட்டவும். ஒரு சாமம் இருக்க விட்டு எடுத்துப் போட்டு சாவிப்பால் எருமைப் பால் கருப்புக் கட்டி பிசைந்து புண் வாயில் கட்டினால் நாலு பக்கமும் உண்டான புழு வெல்லாம் வந்து புண் வாயிலிருக்கும். அதன் பிறகு நெல்லரிசி இடித்து புட்டாக வேக வைத்துப் பண் வாயில் கட்டவும். அந்தப் புண்ணுலே இருந்த புழு வெல்லாம் புட்டிலே வந்து இருக்கும். அ த எடுத்து எரிந்து போட்டு அதுக்கு மேல் எண்ணை போடவும்.

__அதுக்கு எண்ணை எரிக்கும்படி:-__

வேப்பெண்ணை படி.½ வெள்ளைக் குங்கிலியம் பலம்.¼, வெம்பாடம் பட்டை பலம்.க இது மூன்றும் கூட்டி வேக வைத்து இறக்கி ஆற விட்டு அந்த எண்ணை புண் மேலே சீலையில் பிடித்துப் போடவும். இப்படி மூன்று நாள் போடவும். இந்த எண்ணைக்கு எந்த ஆழுத புண்ணும் எல்லாம் ஆறும். இது கை கண்டது.

__கண்டமாலைக்கு மருந்து:-__

ஆயிரங் காலட்டையைக் கொண்டு வந்து காயப் போட்டு அதை எருமை மோரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் கண்டமாலை தீரும். இது கை கண்டது.

__ஒரண்ட வாதத்துக்கு:-__

எருக்கங் கொழுந்து மேல் கொழுந்தைக் கிள்ளிப் போட்டு அடிக் கொழுந்தைக் கிள்ளிக் கொண்டு வந்து மூன்று வெற்றிலையில் எடுத்து அதின் நடுவே வைத்து மடித்துத் தின்னக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உலக்கைச் சத்தம் மூன்று நாள் காதில் கேட்காமே யிருக்கவும். இதுக்கு ஒரண்டவாதந் தீரும். இது கை கண்டது.

__முறைக்காய்ச்சலுக்கு மருந்து:-__

நீலிச் செடியை வலது கைக்குள்ளாகச் சுத்தி வந்து அதைக் காய்ச்சல் காறன் பேர் அவன் தாய் தகப்பன் பேர் சொல்லி அந்தச் செடியைப் பிடித்து இடது காலை அறுத்து கன்னி கழியா பிள்ளை நூற்ற நூலைச் சுத்தி காப்புக் கொடுத்து அந்த காய்ச்சல் காரன் கையில் கட்டவும். மூன்று நாள் மாறல் தீரும். இது கை கண்டது. சமுத்திராப் பழம் கோடாசரிலை நீலிவேர், வேலிப்பருத்தி வேர், ஆடாதோடை வேர் இதைத் தண்ணீரிலரைத்துக் கொடுக்கவும். உள்ளுக்குக் கொடுக்கவும்.

__மசநாய் மசநரி கடித்தால் மருந்து:-__

கருஊமத்தை வேர் அரைத்து சர்க்கரை கூட்டி பசுவின் பாலில் கொடுக்கவும். வெறி எழும்பும் அவனை பிடித்துக் கட்டிப் போட்டு மறுநாள் எலுமிச்சம் பழச் சாறும் சோறும் கொடுக்கவும் தீரும்.

(வேறு)

அதில் தீராத போனால் எலுமிச்சம் பழச்சாறு விட்டு தலையில் தேய்த்து நாறு குடந் தண்ணீர் விட்டு பத்தியம் முறிக்கவும். மசை தீரும்.

__கண் புகைச்சலுக்கு முழுக்கெண்ணை:-__

முசுமுசுக்கைச் சாறு படி.க, பொன்னாங்கண்ணிச் சாறு படி.க, கையாந்தகரைச் சாறு படி.க, பசுவின் பால் படி.க, நல்லெண்ணை படி.க, இதை எல்லாம் சட்டியிலே வார்த்து ஆவாரை விறகு கொண்டு எரித்து மெழுகு பதத்தில் கூட சரக்கு

சாதிக்காய்.க, பொடி பண்ணி மிளகு பலம்.க, நனைக்காமல் கஸ்தூரி விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, குங்குமப்பூ விராகனிடை.க, இது வெல்லாம் இந்த சாறு கண்ட விட்டு இந்தக் கடைச் சரக்கை அதில் போட்டு மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு மூன்று நாழிக்கு முழுகவும். இந்த எண்ணெய்க்குத் தீரும் வியாதி கண் புகைச்சல், கண் வெள்ளை, மண்டை இடிப்பு, நீர்ப் பாய்ச்சல் ஒருத்தலை வலி, கண் சிகப்பு இது வெல்லாந் தீரும்.

<u>அமிர்த சஞ்சீவி:-</u>

சுக்கு விராகனிடை.5, மிளகு விராகனிடை.5, ஏலரிசி விராகனிடை.5, நெல்லி வற்றல் விராகனிடை.15 இது வெல்லாம் ஒரு சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு நன்றாய் வேக வைத்து காற்படி தண்ணீர் இருக்க இறக்கி அந்த தண்ணீரை வார்த்து அரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி இந்த உருண்டை இள நீரில் கொடுக்க எந்த எந்த உஷ்ணமெல்லாந் தீரும்.

<u>எட்டு வகைக் கணைக்கு மருந்து:-</u>

பொன்னாங்கண்ணி சமூலம் பிடி.க, விஷ்ணுகிராந்தி பிடி.க, சிறுபுள்ளடி பிடி.க, அம்மான் பச்சை அரிசி பிடி.க, பிரியன் மரத்துப் பட்டை பிடி.க, அதின் தழை பிடி.க, அத்திப் பட்டை பிடி.க, முசுமுசுக்கை பிடி.க, கரைத்தழை பிடி.க, தூதுவளை சமூலம் பிடி.க, கண்டங்கத்திரி வேர் பிடி.உ, அதின் தழை பிடி.க, தகரைத் தழை பிடி.க, விடத்தல் தருளிலை பிடி.க, குப்பைமேனி தழை பிடி.க, துளசி பிடி.க, நல்ல துளசி பிடி.க, இந்த மருந்தை யெல்லாம் இடித்து நாழி தண்ணீர் விட்டுப் பிழிந்து கொண்டு சோதை எடுத்துப் போட்டு அடுப்பில் வைத்து ஆவாரை விறகு போட்டு எரித்து அரைப்படி சுமனக்கெண்ணெய் விட்டு மிளகு, தக்காளிச் சாறு உழக்கு, ஈர வெங்காயம், உழக்கு அரிந்திட்டுப் போட்டு இந்த எண்ணெய் ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுக்கவும். இதுக்கு எட்டு வகை கணையும் தீரும். இதுக்கு பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>சன்னிக்கு எருமைக் கொம்புத் தயிலம்:-</u>

எருமைக் கொம்பு சீவினது படி.½, எண்ணைச் சட்டியில் போட்டு வறுத்து உருகி வருகிற போது வேப்பெண்ணை படி.½, அதில் விட்டு இதுக்குக் கடைச் சரக்கு பெருங்காயம் இரண்டு தேறு, வசம்பு மூன்று, வெள்ளை வெங்காயம் மூன்று இதை அரைத்து அதிலே போட்டுத் தணாவிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொண்டு சன்னி பட்டதுக்கு வலிப்புக்கும் மேலே தடவ போடவும் தீரும். கை கண்டது.

<u>தலைக் கிடோரிக் குளிகை:-</u>

எட்டிப் பட்டை பலம்.5, எலுமிச்சங்காய்.40, பிழிந்து இதில் இந்தப் பட்டையை போட்டு இதுக்குக் கடைச் சரக்கு சுக்கு பலம்.½, நற்சீரகம் பலம்.½, மிளகு பலம்.½ திராம்பு விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, லவங்கப் பட்டை விராகனிடை.க, கஸ்தூரி விராகனிடை.½ இது வெல்லாம் இந்தச் சாற்றில் போட்டு நாலு நாள் ஊறப் போட்டு அதை அரைத்து பருத்தி விரைப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். குதக வாய்வுக்கு ஒரு விராகனிடை சுக்கு கஷாயத்தில் கொடுக்கவும். பித்த சன்னிக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். பயித்திய வெட்டைக்கு சீரகக் கஷாயத்தில் கொடுக்கவும். வெள்ளை விழுகிற பேருக்குப் புரசம் பட்டையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் போட்டுப் பிசைந்து அதை வடித்து ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். (சோகை) பிரமியத்துக்கு ஒரு உருண்டை சுக்கு கஷாயத்தில் கொடுக்கவும்.

<u>பித்த சன்னிக்கு:-</u>

எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். பயித்தியத்துக்கு சீரக கஷாயத்தில் கொடுக்கவும். வெள்ளை விழுகிற பேருக்கு அரசன் பட்டையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் போட்டுப் பிசைந்து அதை வடித்து ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். சோகைக்கு கம்பம் பூடு இடித்து கம்பஞ் சோற்று தண்ணீரில் போட்டு பிசைந்து இறுத்து இதில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். கள்ள மூடிக்கு கள்ளப் பிணிக்கு வறப் பிணிக்கு நிழலுக்கு இது முதலானதுக்கு திரு நீற்றுப் பச்சை தழை, கசக்கு அதில் ஒரு உருண்டை உரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்குத் தடவ விடவும். இதுக்குப் பத்தியமில்லை.

<u>ஒருத் தலைவலிக்கு மருந்து:-</u>

தேத்தாங் விரையை நறுக்கி கருதிலே குத்தி விளக்கில் பிடிக்க பற்றி வேகும். அதை அவித்தால் ஊசி போலே புகையும். அந்தப் புகையை மூக்கில் பிடிக்க ஒருத் தலை வலி நிற்கும்.

<u>மூன்று நாள் மாறலுக்கு:-</u>

முருங்கையிலை, மிளகு, வெள்ளை, வெங்காயம் மூன்றும் நறுக்கிப் பொட்டணமாய்ப் பிடித்து மூக்கிலே பிடிக்கவும். ஒரு நாழிகை கழித்து ரெண்டா நாழிகைக்கு முலைப் பாலில் நனைத்து பிடிக்கவும். மூன்று நாள் மாறல் தீரும். இது கை கண்டது.

<u>வாத பித்த சுரத்துக்குக் கற்கம்:-</u>

சிந்தி தண்டு முத்தினது கொண்டு வந்து மேல் புறணியைச் சீவிப் போட்டு அதை நறுக்கித் தண்ணீர் விட்டுப் புளிந்து கரண்டி காய வைத்து அதிலே சுத்தி மூரிச்சு வடித்து நாக்குப் பூச்சி கருத்துக் கழுவிப் போட்டு கரண்டி காய வைத்து அதில் இந்த

புழுவைப் போட்டு அதை பற்பமாகச் சேர்த்து கசாயத்தில் போட்டுக் கலக்கி கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். வாத பித்த சுரந் தீரும். பத்தியம், உப்பு, புளி ஆகாது.

சுரத்தின் பேரில் தாகம் எடுத்தால் குடிநீர்:-

தினை அரிசி ரூபாய் அளவு சட்டியில் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் வார்த்து அதில் நாக்குப் பூச்சி ரூபாய் அளவு எடுத்து அதை கழுவிப் போட்டு இந்த தண்ணீரில் போட்டு வேக வைத்து இறக்கி ஆற விட்டு இந்தத் தண்ணீரை இறுத்துக் கொடுக்கவும். தாகம், சுரம் தீரும். இது கை கண்டது.

பித்த சுரத்துக்கு குடிநீர்:-

ஆடாதோடை பர்ப்படாகம், சீந்தில் தண்டு, முத்தக்காசு, விஷ்ணு காந்தி, சிற்றாமுட்டி, பேராமுட் ஒரு நிறையாய் நிறுத்துச் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு சுக்கு, திப்பிலி, சௌகாரம், மிளகு, வெள்ள வெங்காயம் இது ஐந்தும் சீலையில் முடிந்து அந்த சட்டியில் போட்டு அதை நாலுக்கொப்பில் வேக விட்டு அதைக் காலம்பற அந்தப் பொட்டணத்தை எடுத்து அந்தக் கசாயம் கொண்டு அரைத்து அரைத்து அதை உள் ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும்.

வாத சுரத்துக்கு இஞ்சிக் கற்கம்:

இஞ்சி பலம்.க, கொண்டு வந்து மேல் புறத்தோலைச் சுரண்டிப் போட்டு தட்டிக் காய வைத்துச் சோஉடம் அக்கிரகாரம், சித்தரத்தை, திப்பிலி, மிளகு, பெருங்காயம், ஏலம், கிராம்பு, ஒரொன்றுக்கு காசிடை.க, அதை வறுத்து நறுக்கி அந்தக் கற்கத்தில் போட்டு ஒரு பணவிடை கஸ்தூரி வாத ராச்சுதன் ஒரு குளிகை சேர்த்து அரைத்துக் கலக்கிக் குடிக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வாத சுரந் தீரும்.

காச்சலுக்கு தோஷத்துக்கு தாகத்துக்கு:-

முந்திரிப் பழம் சொம்புத் தேன் சேர்த்து நாவில் தடவவும்.

தீராவிட்டால் தளம்:-

கலங்கொம்பு பவழம், சங்கு, செம்பு வெள்ளி பொன்று மயிலிறகு இதெல்லாம் முலைப் பாலில் அரைத்து நாக்கில் தழப் போடவும். நெஞ்சில் தடவவும். இதுக்கு தீராவிட்டால் மயிலிறகு சுட்டுக் கொம்புத் தேனில் கலந்து நாவில் தளம் போடவும் தீரும்.

ஜுதக சன்னி உதிரக் காணுகிறதற்கு:-

காரை பொருமி சமூலங் கொண்டு வந்து உரலிலே யிடித்துப் பிழிந்த அதில் நல்லெண்ணெ உழக்கு விட்டு உள்ளுக்கு கொடுக்கவும். மூன்று நேரம் கொடுக்கவும். ஜுதக சன்னி தீரும். பத்தியம் பசுவின் தயிரும் சோறும் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

நரம்புச் சிலந்திக்கு மருந்து:-

குப்பை மேனி, எருக்கிலங் கொழுந்து, ஈர வெங்காயம், நல்ல சீரகம், விராகனிடை.க, நல்ல வெல்லம் விராகனிடை.8 இதெல்லாம் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன் நேரம் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் புகை, புளி ஆகாது. மூன்று நாள் தள்ளவும்.

பித்த உன்மத்துக்கு மருந்து:-

மஞ்சல் நாறு வருஷ மரத்தின் பட்டையை வெட்டி வந்து பலம்.20 இடித்து தண்ணீர் விடாத எருமை மோர் மூன்று வள்ள மோரில் இந்தப் பட்டையைப் போட்டுப் பிசைந்து வடித்து சீரகம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, வறுத்துப் பொடி பண்ணி அந்த மோரை வாயகலச் சட்டியில் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இடித்த அந்தத் தூளைப் போட்டு நல்ல வெல்லம் பலம்.-, நறுக்கிப் போட்டு வழித்துக் கலயத்தில் வைத்துக் கொண்டு நேரம் பாக்களவு தின்னவும். இதுக்கு மோரும் சோறும் தின்னவும். எலுமிச்சை அறுகாய் கட்டவும் பித்த சுரம் தீரும்.

நாலு வகை உன்மத்துக்கு பற்பம்:-

பழங்கிட்டம் இடித்து வடிகட்டினது பலம்.க, நாயுருவிச் சாம்பல் பலம்.க, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, இது மூன்றும் வறுத்து நறுக்கி பழைய வெல்லம் பலம்.க, இதை யெல்லாம் கூடக் கலந்து கலசத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது நேரம் தின்னவும். இதுக்குப் பத்தியமில்லை. நாலு வகை உன்மமுந் தீரும். இது கை கண்டது.

சிலேத்தும சுரத்துக்கு குடிநீர்:-

நெல்லி நாக்கு, புளிய நாக்கு, வேப்ப நாக்கு நாக்கு, ஆடாதோடை பர்ப்படாகம் விஷ்ணு காந்தி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, கொளிஞ்சி மேல் விழுந்த நெலு ஒரு நிறையாய்ப் போட்டு தண்ணீர் படி. விட்டு வேக விட்டு அரை படியாகக் காய்ச்சி அந்தக் கசாயத்தில் ஒரு குலைக் குடோரியை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். தாக மெடுத்தால் பத்து வருஷத்து வைக்கல் பழுதைச் சுட்டு தண்ணீரில் போட்டு தெளிய விட்டு இறுத்துக் கொடுக்கவும். சிலேத்தும சுரந் தீரும்.

வில்வலைக்காய் ஒரு பலம்.30, வில்வப் பட்டை பலம்.30 இது இரண்டும் ... சட்டியில் போட்டு ... வள்ளத் தண்ணீர் வார்த்து நாலிலொன்றாக காய்ச்சி

வெள் கருப்பு, கர்மாங்கிஷம் கண்ணில் பூ, தலைவலி, நித்திரை யில்லா மலிருக்கிறது நீல காசம் ரெத்தப் படலம் பூ வெட்டு புரை மூடியது தீரும். [illegible]

<u>வறட் காமாலைக்கு ஊது காமாலைக்கு மருந்து</u>:-

பூவாரை வேர், எலுமிச்சங்காய் மருவாதி நன்றாக அரைத்து வெள்ளாட்டுப் பாலில் எட்டு நாள் குடிக்கவும். காரப்பு, புளி விடவும்.

<u>ஊது காமாலைக்கு</u>:-

குமட்டிக்க இலையை நடு வாங்கிப் போட்டு அரைத்து எலுமிச்சங்காய் மருவாதி எருமைத் தயிரில் கலந்து மூடித் தின்னவும்.

(வேறு)

கழுதை லத்தி ஒருபிடி கொண்டு வந்து காராட்டுப் பாலில் பிசைந்து கால் படிக்கு பிழிந்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். ஊது காமாலை தீரும். உப்பு, புளி தள்ளவும்.

<u>நேத்திர வாய்வுக்கு தலை வலிக்கு எண்ணெய்</u>:-

பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர் இது இரண்டும் சரி கட்டி தலைப் பாலி விட்டு அரைத்துப் பசுவின் வெண்ணெயில் எரித்து மூக்கில் நசியம் பண்ணவும். தலை நோவு தீரும்.

<u>எண்ணெய்</u>:-

பொன்னாங்கண்ணிச் சாறு படி.க, சிறுகீரைச் சாறு படி.க, கய்யாந்தகரைச் சாறு படி.க, விளக்கெண்ணெய் படி.க, நல்லெண்ணெய் படி.க, பசுவின் நெய் படி.க, இது ஆறும் கூட்டி சூரிய புடம் வைத்துக் கொண்டு காலமே தேய்த்து மூன்று சாம மட்டும் இருந்து பச்சை அரப்புக் கொண்டு வந்து தேய்த்து முழுகவும். இப்படி பத்து முழுக்கு முழுகவும். நேத்திர வாய்வு தீரும்.

<u>பாலவுக்கு மருந்து</u>:-

அமுக்கிலாங் கிழங்கு, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துப் பூசவும். இப்படி மூன் நாள் பூசவும். இதக்குப் பாலவு வெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>நீரடைப்புக்கு மருந்து</u>:-

நெருஞ்சிக் கொத்தான் காய் முள்ளு இலை மூன்று பூ மூன்று கற்பூர சலாசத்து பலவிடை.உ ... வெங்காயம் காசிடை.க, இந்த மருந்தை யெல்லாம் அரைத்து வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

<u>மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு</u>:-

அத்திப் பிஞ்சு அரைப்படி கொண்டு வந்து உரலில் இடித்து எருமை மோர், அரைப்படி விட்டுப் பிசைந்து வடி கொண்டு அதை உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் மூன்று நேரம் கொடுக்கவும். இதக்குப் பத்தியமில்லை. மூக்கில் ரெத்தம் விழுகிறது தீரும்.

<u>சுரத்தின் பேரில் தாகமெடுத்தால் குடிநீர்</u>:-

சிவப்பு அரிசி ரூபாய் அளவு சட்டியில் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் வார்த்து அதில் நாக்குப் பூச்சி ரூபாயிடை அளவு எடுத்து அதைக் கழுவிப் போட்டு இந்தத் தண்ணீரில் போட்டு இதை வேக விட்டு இறக்கி ஆற விட்டு இந்தத் தண்ணீர் பிழிந்துக் கொ கொடுக்கவும் தாகம் நிற்கும். இது கை கண்டது.

<u>பித்த சுரத்துக்கு குடிநீர்</u>:-

ஆடாதோடை பற்படாகம், சீந்தில் தண்டு, முத்தக்காசு, விஷ்ணு காந்தி, சித்தாமுட்டி, பேராமுட்டி ஒரு நிறையாய் நிறுத்துச் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு சுக்கு, திப்பிலி, தேசாவரம், மிளகு, வெள்ளை வெங்காயம் இது ஐந்தும் சீலையில் முடிந்து அந்தச் சட்டியில் போட்டு அதை நாலுருப்பில் வேக விட்டு. காலம்பற அந்தப் பொட்டணத்தை எடுத்து அந்தக் கசாயங் கொண்டு அரைத்து அதை உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். பித்தம் நிற்கும்.

<u>சிலேத்தும சுரத்துக்கு குடிநீர்</u>:-

நெல்லி நாக்கு, புளிய நாக்கு, வேப்ப நாக்கு, நாவல் நாக்கு, ஆடாதோடை பற்படாகம் விஷ்ணு காந்தி, சித்தாமுட்டி, பேராமுட்டி, கொள்ளிஞ்சி மேல் வந்த எருவு ஒரு நிறையாய்ப் போட்டுத் தண்ணீர் படி. , விட்டு வேக விட்டு அரைப் படியாகக் காய்ச்சி அந்தக் கசாயத்தில் ஒரு துலை கோரோசனை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். பத்து வருஷத்து வைக்கல் பழுதையை சுட்டுத் தண்ணீரில் போட்டுத் தெளிய விட்டு பிழிந்துக் கொடுக்கவும் சிலேத்தும சுரந் தீரும்.

<u>நாலு வகை குன்மத்துக்கு பற்பம்</u>:

பழுக்கசிட்டம் இடித்து வடி கட்டினது பலம்.உ, நாயுருவிச் சாம்பல் பலம்.க, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, இது மூன்றும் வறுத்து நறுக்கிப் பழைய வெல்லம் பலம்.க, இதை எல்லாங் கட்டிக் கலந்து கலசத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல்க் கொண்டது ரெண்டு நேரமும் தின்னவும். இதக்குப் பத்தியமில்லை. நாலு வகைக் குன்மமுந் தீரும். இது கை கண்டது.

****

முற்றும்.

****

க.ச: 2.1.64.

134